
# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்

மலர் 6 இதழ் 7



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

நாவலர் பிறந்த நாடு - தமிழ்
நடையினைப் பயின்ற வீடு
மேவுயர் சைவம் விளங்கத் - தவ
மேதையைப் பெற்ற இலங்கை

— வி. கந்தவனம்

15-11-68

30 சதம்

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் வைரங்களுக்கும் ★

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம். மீருன் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னுதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**

## தமிழக நேயர்களுக்கு!

வெற்றிமணி மாதந்தோறும் தமிழகத்திற்கு அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள நேயர்கள் வெற்றிமணிக்குரிய சந்தா, மாணவர் மன்றம், பேனு நண்பர் சங்கம் இவற்றிற்குரிய தொகைகளை

கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

தமிழக விற்பனையாளர்களும், விளம்பரதாரர்களும் இவருடன் தொடர்பு கொள்ளவும்.

**கோபாலர் பண்ணை**

*3 - 31 -* ஏ, மேடக்சு தெரு, சென்னை 4, இந்தியா.



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# — வெற்றிமணி —

## வருடச் சந்தா

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 3-50 |
| இந்தியா | ரூபா. | 3-50 |
| மலாயா | $ | 3-50 |

தபாற்செலவுட்பட

தனிப்பிரதி தபாலில் பெற விரும்பினால் 35 சத முத்திரையனுப்ப வேண்டும்.

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்யின் 15 வீதக் கழிவுண்டு

விபரங்களுக்கு எழுதுக.

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3

அழியாத சித்திரம் ... ... ... 4

புவி - பொது விபரம் ... ... 6

கணக்கியலுக்கோர் அறிமுகம் ... 8

சட்டமும் சமுதாயமும் ... ... 10

இதயக்கோயிலும் இறைவழிபாடும் 13

நாடகம் ... ... ... ... ... 16

கவிதை அரங்கம் ... .. ... 22

கேர்ணல் யூரிககாரின் ... ... 24

புத்தள மா நகரம் ... ... ... 26

மாணவர் மன்றம் ... ... ... 28

பண்டாரவன்னியன் நினைவுவிழா 29

பிறர் நலம் பெரிது ... ... ... 31

அறிவுப்போட்டி 5 ன் முடிவும் பரிசுபெற்றோர் விபரமும் ... 32

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 6. | வெள்ளிக்கிழமை 15-11-68 | இதழ் 7

# நாவலர் உருவச் சிலை

ஐந்தாங் குரவரென அகில மெல்லாம் போற்றும் நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்களுக்குச் சிலை எழுப்பவேண்டும் என்ற நீண்டகாலக் கனவு கார்த்திகை முதலாந்திகதி உருவச்சிலை வார்ப்பு ஆரம்பவிழாவுடன் நனவாகிவிட்டது. சைவசமயத்தின் திருஉருவாகவும், தமிழ்த்தாயின் பெரு வாழ்வாகவும் திகழ்ந்து நிலையான நற்பணி புரிந்தவர் நாவலர் பெருமான். தமிழ்ச் சைவ மக்களின் உள்ளம் குளிர கொழும்பு விகாரமகா தேவிப் பூங்காவில் அமைந்த சிற்பக் கூடத்தில் நாவலர் பெருமானின் சிலையாக மிளிரவிருக்கும் திருஉருவின்மேல் நாவலர் சபையின் தலைவர் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அவர்கள் வார்ப்பின் முதல் ஞாபகமாக வார்ப்புக் களியை சமயாசாரப்படி தொட்டுவைத்து வார்ப்பு வேலைகளை ஆரம்பித்து வைத்தார். சிற்பக் கலைஞர் எம். என். மணி சிலையின் உருவுக்கு மலர்மாலை சூட்டித் தாம் தொடரும்பணிக்கு ''நாவலர் பெருமானே நீயாக நின்று நின்றிறன் பேணும்'' என்று தொட்டு வணங்கினர்.

சிற்ப வேலைகள் நிறைந்த அழகிய மண்டபத்தில் நாவலர் சிலை அடுத்த சித்திரை மாதமளவில் தாபிக்கக்கூடியதாக சிலையை அமைத்துக் கொடுக்க முடியும் என சிற்பக் கலைஞர் கருத்துத் தெரிவித்தார். அன்றியும் நாவலர் பெருமானுக்குச் சிலைவடிக்கும் வேலையைத் தொழிலாகக் கருதாது தமிழ் மக்களுக்குச் செய்யும் தொண்டாகக் கருதியே இப்பணியைத் தான் மேற்கொண்டுள்ளதாக சிற்பக்கலைஞர் கூறியதாக செனெட்டர் திரு. த. நீதிராஜா அவர்கள் விழாவில் குறிப்பிட்டமை தமிழ்ச் சைவ மக்களின் உள்ளத்தைக் குளிரச் செய்கின்றது.

இப் புனித நிகழ்ச்சிக்கு யாவரும் தங்களால் இயன்ற பொருளுதவியைப் புரியவேண்டும் என்ற கருத்தில் இலங்கை சாகித்திய மண்டலம் சென்ற ஆண்டின் சிறந்த தமிழ் நூலாகத் தேர்ந்தெடுத்த கந்தப்புராணம் தக்ஷ காண்டம் உரைநூலின் ஆசிரியராகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தன்னைக் கௌரவித்த விழாவில் தனக்குக் கிடைத்த பரிசு ஆயிரம் ரூபாவையும், புகழையும் நாவலர் பெருமானுக்கே சமர்ப்பிப்பதாகக் கூறி நாவலர் சபையிடம் ஒப்படைத்தது போற்றப்படக்கூடியதாகும்.

# அழியாத சித்திரம்

இரசிகமணி கனக. செந்திநாதன்

மருத நிலத்தை வருணிக்க வந்த கம்பர் 'தண்டலை மயில்களாட' என்று தொடங்கி அருமையான கவிதை ஒன்றை நமக்கு அளித்துள்ளார். 'சோலைகளிலே மயில்கள் நர்த்தனம் ஆட, தாமரைப் பூக்கள் விளக்குகள்போல் எரிய, மேகங்கள் மத்தளம் அடிக்க, குவளைப் பூக்கள் இவற்றையெல்லாம் பார்த்திருக்க, பூக்களி லிருந்து வண்டுகள் பாட மருதமாகிய அரசி வீற்றிருக்கிருள்' என்பது அதன் கருத்து. இப்படியே சீவகசிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கதேவர் 'காய்மாண்ட தெங்கின் பழம் வீழ' என்று தொடங்கி ஏமாங்கதநாட்டை வருணிக்கும்போதும் திருவிளையாடற் புராண ஆசிரியராகிய பரஞ்சோதி முனிவர் 'தாமரைக ளாஞ்சி தாங்க' என்று தொடங்கி இளவேனிற் பருவத்தை வருணிக்கும்போதும் ஆஹா! என்று மகிழ்ச்சியினுல் துள்ளுகிருேம். திரும்பத் திரும்பப் படித்து வாயூறுகிருேம்.

பிற்காலப் புலவர்களிற் சிலர் ஆதீத கற்பனைகளையெல்லாம் செய்து மிதமிஞ்சி வருணித்து-புழுகி-நம்மை அலுப்படையவும் செய்திருக்கிருர்கள். புழுகுவதுதான் புலவர் தொழில் எனப் பொதுமக்கள் பேசவும் செய்துவிட்டார்கள். இருப்பதை வைத்துக்கொண்டு கொஞ்சம் கற்பனையும் கலந்து வருணனைகளைச் செய்தால் வாசிக்க இனிப்பாகவே இருக்கும். யாழ்ப்பாணத்துக் கவிஞர் ஒருவர் கிராமம் ஒன்றை வருணிக்கும் வருணனையைப் பாருங்கள்.

''சின்னத் தவளையினம் வீணை தித்தி கானங் குழல் இசைப்ப
பென்னம் பெரிய மண்டூகம் பேரி முழவு கடமொலிப்ப
மின்னின் மினிகள் விளக்கேந்த மேக வெடிச் சங்கொலியுடனே
வன்னச் சாலிமாது வயல் அரங்கி லாடி மகிழ்ந்திடுமே''

நெல்லாகிய பெண்ணணங்கு அழகாக நாட்டியமாடுகின்ருள். சின்னத் தவளைகள் தித்திப்பாகிய வீணை, புல்லாங்குழல் முதலியவற்றை வாசிக்கின்றன. பென்னம்பெரிய தவளைகள் (மண்டூகம்) மத்தளம், கடவாத்தியம் முதலியவற்றை ஒலிக்கின்றன. மின்மினிப் பூச்சிகள் விளக்கேந்து

கின்றன. மேகம் இடியாகிய சங்கொலியை எழுப்புகின்றது. அவள் நாட்டியம் ஆடும் காட்சி ஆஹா அற்புதம்! அற்புதம்!!' என்கிறார் அவர்.

'தண்டலை மயில்களாட' என்ற கம்பரின் கவிதையைப் படி எடுத்த பாடல்தான் இது. எனினும் எளிமையும் அழகுங்கொண்டு துலங்குகின்றது. மழைகாலங்களிலே குளங்களிலும் கேணிகளிலும் பிற நீர்நிலைகளிலும் சின்னத் தவளையின் கூச்சலையும் பெரிய தவளையின் சத்தத்தையும் கேட்கிறோம். அதைச் சரியாகப் புலவர், பாடலிற் புகுத்தி 'சின்னத் தவளை ... ... குழல் இசைப்ப' என்றும் 'பென்னம் பெரிய மண்டுகம் ... ... கடமொலிப்ப' என்றும் பாடியுள்ளது நம் அநுபவத்தோடு ஒட்டி நம்மை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. சின்னத்தவளை, மண்டுகம், மின்மினி, நெல்வயல், மேக இடி இவற்றை நாமும்தான் கண்டோம். ஆனல் புலவர் இவற்றை ஒன்றுசேர்த்து அழியாத சித்திரம் ஒன்றல்லவா ஆக்கிவிட்டார்? கம்பரின் பாடலை மாதிரிகையாக வைத்துக்கொண்டு பாடிய கவிதையை ஒரேயடியாகப் புழுகுகிறீர்களே என்கிறீர்களா? இதோ கவிஞரின் அடுத்த பாடலைப் பாருங்கள். ஒரேயடியாகத் துள்ளிக் குதிப்பீர்கள்.

பாடசாலையிற் படித்துவிட்டுப் பின்னேரம் பசுமாடுகளை மேய்க்கும் சிறுவர்கள் முசுப்பாத்தியாக என்ன செய்கிறார்கள் தெரியுமா?

''கள்ளித் தடியை முறித்தடுக்கி மூட்டிக் கனலைப் பிடுங்கி மர
வள்ளிக் கிழங்கை வைத்துமிசை வாட்டி உரித்துக் கடித்துண்டு
துள்ளித் திரிந்து விளையாடித் தோழருடன் ஆனிரை மேய்க்கும்
பள்ளிச் சிறுவர் பயிலிடங்கள் பலவும் பாங்கர் உளகானம்''

கள்ளித்தடியை முறித்தடுக்கி மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுத் தின்னும் சிறுவர்களைப் புலவர் காட்டுகிறார். பச்சைப்படியான - நிதர்சனமான காட்சி. இப்படியெல்லாம் பாடியவர் யார் தெரியுமா? நீர்வேலி வாசரும், இந்து சாதனப் பத்திரிகையில் உதவி ஆசிரியராய் இருந்தவரும் (1887 — 1959) நீர்வை வளம், நீர்வைச் சிலேடை வெண்பா, பெரியபுராணக் கீர்த்தனை என்பவற்றை இயற்றியவருமாகிய கு. சிற்சபேசன் அவர்களாவர்.

தொடர்ச்சி:-

# புவி — பொது விபரம்

— மணிலா —

## காற்றுக்கள்

30° உயரமுக்கப் பகுதியிலிருந்து மத்திய கோட்டை நோக்கி வீசும் காற்று வியாபாரக் காற்ருகும். இக் காற்றுக்கள் பண்டைக் காலத்தில் வர்த்தகர்களின் போக்குவரத்திற்குச் சாதகமாயிருந்த காரணத்தாலேயே இப் பெயர் பெற்றது. இது தடக்காற்றெனவும் அழைக்கப்படும். வடவரைக் கோளத்தில் இவை வடகிழக்குக் காற்றெனவும் தென்னரைக் கோளத்தில் தென் கிழக்குக் காற்றெனவும் அழைக்கப்படுகின்றன. இவை கீழைக் காற்றுக்கள் என்றும் பெயர் பெறும். இங்கிருந்து முனைவினண்மையிலுள்ள தாழமுக்கத்தை நோக்கி (60°) வீசும் காற்று எதிர் வியாபாரக் காற்ருகும். வர்த்தகக் காற்றுக்களின் திசைக்கு எதிரான திசையில் வீசுவதால் இது இப்பெயர் பெற்றது. வடவரைக் கோளத்தில் இது தென்மேல் காற்ருயும் தென்னரைக் கோளத்தில் வடமேல் காற்ருயும் வீசுகின்றது. இது மேலைக் காற்றெனவும் அழைக்கப்படும்.

முனைவுகளிலிருந்து வீசும் காற்று முனைவுக் காற்றுக்களாகும். இக் காற்றுக்கள் எல்லாம் கோட் காற்றுக்கள் எனப்படும்.

**தரைக்காற்று:**

இரவில் நிலம் விரைவாகக் குளிரும். ஆனல் கடல் வெப்பமாக இருக்கும். எனவே அதன் மேலுள்ள வளியும் அதிக வெப்பமடைந்து விரிவாகி மேலெழும். இவ்விடத்தில் செறிவு குறைவாயிருப்பதால் குளிர் காற்று நிலத்திலிருந்து இவ்விடத்திற்கு வீசும். இது நிலத்திலிருந்து வீசுவதால் தரைக் காற்று அல்லது நிலக்காற்று என்றழைக்கப்படும்.

**கடற்காற்று:**

பகலில் நிலம் விரைவில் வெப்பம் அடைவதால் அதன் மேலுள்ள காற்றும் வெப்பமாக இருக்கும். எனவே நிலைமை மாறி நிலத்திலுள்ள காற்று மேலெழ அல்விடத்திற்கு கடலிலிருந்து குளிர் காற்று வீசும். இது கடலிலிருந்து வீசுவதால் கடற்காற்று என்றழைக்கப்படும்.

இக் காற்றுக்கள் உண்டாகக் கடற்கரையோரங்களே வாய்ப்பானவை. கடற்காற்று நின்றவுடன் நிலக்காற்று ஆரம்பிப்பதில்லை. இடையில் சில மணி நேரங்கள் வித்தியாசமிருக்கும். இந் நேரத்தில் நிலத்திலும் கடலிலும் ஒரேயளவான வெப்பம் இருக்கும். கடல், தரைக் காற்றுக்களை சித்திரை, கார்த்திகை மாதங்களில் இலங்கையில் நன்கு அவதானிக்க முடிகிறது.

பருவக் காற்று:

குறிப்பிட்ட பருவங்களில் இக் காற்றுக்கள் வீசுவதால் இப்பெயர் பெற்றன. நிலக்காற்றும் கடற் காற்றும் பெருமளவில் மாதக் கணக்கில் வீசுவதே பருவக் காற்றாகும். ஆசியாவின் தெற்கு, கிழக்குப் பகுதிகளில் இக்காற்று நன்கு விருத்தியாகியுள்ளது.

சூறாவளி:

காற்றமுக்கம் திடீரெனக் குறையும் சமயங்களில் அவ்விடத்தை நிரப்புவதற்குச் சுற்றுப்புறங்களிலிருந்து காற்று சுழன்று சுழன்று வேகமாக வீசும். இது சூறாவளியாகும். அமுக்கம் குறைந்த இடங்கள் சூறாவளிகள் எனவும் அமுக்கம் கூடிய இடங்கள் முரண் சூறாவளிகள் எனவும் கூறப்படும். சூறாவளிகள் இரண்டு வகைப்படும்.

i அயனச் சூறாவளி

ii இடை வெப்பச் சூறாவளி

— வளரும்

இலங்கையில் ஏஜண்டு தேவை!
தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகும்
— ஒரே ஒரு சிறுவர் மாதமிரு முறை —
★ மத்தாப்பு ★
ஆசிரியர்: மகிழ்ச்சிக்கண்ணன்
மாதிரிப்பிரதிகளுக்கும், விபரங்களுக்கும் தொடர்புகொள்க
கோபாலர்பண்ணை,
3 - 31 - ஏ, மேடக்சு தெரு, சென்னை 4, இந்தியா.

தொடர்ச்சி:-

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (8)

வை. சி. சிவஞானம்

## 4. விற்பனை நாளேடு

வியாபார நிலையங்கள் தமது சரக்கைப் பெரும்பாலும் இரு முறைகளில் விற்பனை செய்யலாம்.

i உரொக்க விற்பனை ii கடன் விற்பனை

உரோக்க விற்பனையாவது பணத்தைப் பெற்றுக்கொண்டு அல்லது காசோலையைப் பெற்றுக்கொண்டு சரக்கைக் கொடுத்தலாகும். உரொக்க விற்பனை நடவடிக்கைகள் காசேட்டின் பற்றுப் பாகத்தில் காசு நிரலில் அல்லது வங்கி நிரலில் பதியப்படும். இதன் எதிர்ப்பதிவுகள் கடன் பட்டோர் கணக்கில் (பெயருள் கணக்கில்) பதியப்படும்.

கடன் விற்பனையாவது சரக்கைக் கொடுத்துப் பின்னொரு திகதியில் பணத்தை அல்லது காசோலையைப் பெறுதலாகும். கடன் விற்பனையில் விற்பனை செய்யப்படும்போது காசுடனோ, காசோலையுடனோ தொடர்பில்லாதபடியால் காசேட்டில் கடன் விற்பனையைப் பதிவு செய்யமுடியாது. கடன் விற்பனையுடன் தொடர்புடையவர்கள் கடன் பட்டவர்களே. உடனுக்குடன் தகுந்த விபரங்களுடன் கடன் விற்பனை விபரங்களைப் பதிவு செய்வதற்கு ஒரு ஏடு தேவைப்படுகிறது. அதுவே விற்பனை நாளேடாகும். கொள்முதல் நாளேட்டைப்போல விற்பனை நாளேட்டையும் இரு முறைகளில் வைத்திருக்கலாம்.

அவையாவன: i சாதாரண முறை ii நிரன் முறை

கொள்முதல் நாளேட்டில் தந்த விளக்கங்களே இதற்கும் பொருந்தும்

**உதாரணம்:** பரமன் என்ற சில்லறை வியாபாரியின் கடன் விற்பனை நடவடிக்கைகளைச் சாதாரண முறை விற்பனை நாளேட்டிலும், நிரன் முறை விற்பனை நாளேட்டிலும் பதிந்து காட்டுக?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தை 5 | குகனுக்கு | சேலை | விற்பனை | 450 | ரூபா |
| | ,, | வேட்டி | விற்பனை | 300 | ,, |
| தை 10 | இராமனுக்கு | சேலை | ,, | 550 | ,, |
| | ,, | வேட்டி | ,, | 250 | ,, |
| | ,, | சேட் | ,, | 450 | ,, |
| தை 15 | இராசனுக்கு | சேலை | ,, | 650 | ,, |
| | ,, | வேட்டி | ,, | 350 | ,, |
| | ,, | சேட் | ,, | 250 | ,, |
| தை 20 | பாலனுக்கு | சேலை | ,, | 550 | ,, |
| | ,, | வேட்டி | ,, | 175 | ,, |
| | ,, | சேட் | ,, | 325 | ,, |
| தை 28 | குகனுக்கு | சேலை | ,, | 525 | ,, |
| | ,, | வேட்டி | ,, | 275 | ,, |

## i சாதாரண முறை விற்பனை நாளேடு

| மீ | உ | விபரம் | பே. பக்கம் | தொகை | |
|---|---|---|---|---|---|
| தை | 5 | குகன் | 5 | 750 | 00 |
| ,, | 10 | இராமன் | 15 | 1250 | 00 |
| ,, | 15 | இராசன் | 18 | 1250 | 00 |
| ,, | 20 | பாலன் | 22 | 1050 | 00 |
| ,, | 28 | குகன் | 5 | 800 | 00 |
| | | விற்பனைக்கணக்கு வரவுக்கு கொ. செ. | | 5100 | 00 |

## ii நிரன் முறை விற்பனை நாளேடு

| மீ | உ | விபரம் | பே. பக்கம் | தொகை | சேலை | வேட்டி | சேட் |
|---|---|---|---|---|---|---|---|
| | | குகன் | 5 | 750 | 450 | 300 | |
| | | இராமன் | 15 | 1250 | 550 | 250 | 450 |
| | | இராசன் | 18 | 1250 | 650 | 350 | 650 |
| | | பாலன் | 22 | 1050 | 550 | 175 | 325 |
| | | குகன் | 5 | 800 | 525 | 275 | |
| | | விற்பனை கணக்கு வரவுக்கு கொ. செ. | | 5100 | 2725 | 1350 | 1025 |

* பேரேட்டுப் பக்கம் என்னும் நிரலில் குறிக்கப்பட்ட இலக்கம் பேரேட்டில் கடன்பட்டவர்களுடைய கணக்கு இருக்கும் பக்கத்தைக் குறிக்கிறது.

**விற்பனை நாளேட்டின் பயன்கள்:**

i பேரேட்டிலுள்ள விற்பனைக் கணக்கின் பதிவுகளைக் குறைக்கிறது

ii நடவடிக்கைகளைத் தவறாது உடனுக்குடன் பதிவதற்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது.

iii கடன் விற்பனை விபரங்களை இலகுவில் அறிவதற்கும், தவற விடாது இருப்பதற்கும், பிழைகளைத் தவிர்ப்பதற்கும் உதவியாக இருக்கிறது.

(தொடரும்)

தொடர்ச்சி:-

# சட்டமும் சமுதாயமும் (2)

க. வே. மகாதேவன், சட்டக்கல்லூரி மாணவன், கொழும்பு.

இனிமேல் சட்டத்தையும் சமுதாயப் பிரச்சினைகள் சிலவற்றையும் எடுத்தாய்வோம். அவ்வாறு ஆயும்போது ஈழத்துச் சமுதாயமே இங்கு கருத்துக் கொள்ளப்படுகின்றது. "Ignorantio leges non excusat" என்பது இலத்தீன் மொழியிலான ஒரு சட்ட மூதுரை. இதன் பொருளை ஆங்கிலத்தில் கூறினல் "Ignorance of law is no excuse" என்பதாகும். அதாவது "சட்டம் இது என்பது தெரியாது என்பது சாக்காகாது" என்கிறது சட்டம். வேற்றுராட்சியில் வெகுநாள் வாழ்ந்த இலங்கையர் வெள்ளையர் நாட்டில் இருந்த சட்டங்களை அப்படியே அள்ளி எடுத்துக்கொண்டனர் என்பது உண்மையே. மேலே கூறிய சட்ட மூதுரை இங்கிலாந்திலிருந்தோ ஒல்லாந்திலிருந்தோ இறக்குமதி செய்யப்பட்டவொன்று. இங்கிலாந்தில் இந்தச் சட்ட மூதுரை இருக்கின்றதென்றுல் அது நியாயமானதே. ஏனென்றுல் ஆங்கிலேயரின் மொழி ஆங்கிலம். சட்டங்களும் சட்டப் புத்தகங்களும் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன. எனவே ஆங்கிலேயர் (அவர்கள் விரும்பினல்) சட்ட நூல்களை வாசித்துச் சட்டங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கையில் பெரும்பான்மையராக உள்ளவர்கள் தமிழரும், சிங்களவரும். அவர்கள் மொழி தமிழும், சிங்களமும். ஆனல் சட்டமும், சட்ட நூல்களும் ஆங்கிலத்தில் உள்ளன. ஆங்கிலம் கற்ற இலங்கையர், அதுவும் சட்டம் விளங்கக்கூடிய அளவிற்கு ஆங்கிலம் கற்ற இலங்கையர் அரியரே. இஃதிவ்வாருக இலங்கையர் (அவர்கள் விரும்பினுலும்) வேற்றுமொழியில் உள்ள சட்டத்தைக் கற்றுக் கொள்ள முடியுமா? முனைந்தாலும் முடியாத நிலையில் உள்ள மக்கள் அவர்களைக் குற்றவாளிகளாக நிறுத்தும்போது தமக்குச் சட்டம் தெரியாது என்பதைச் சாக்காகக் (உண்மையான சாக்கு) கூறின் அதை ஏற்றுக்கொள்ள மறுப்பது முறையா? சட்டத்தால் துயருறும் சமுதாயத்தினர் இந்தக் கடாவைக் கடாவக் கடமைப்பட்டிருக்கிறுர்கள். அரசு பதில் கூறுமா?

வலியார், மெலியார், பொருளுளார், பொருளிலார், அரசன் ஆண்டி என்ற பாகுபாடு சட்டத்துக்கில்லையென்றும் சட்டத்தின் சந்நிதியில் எல்லோரும் ஒரே மட்டமே என்றும் கூறப்படுகின்றது. ஆனல் இதில் உண்மையில்லை என்று நான் கூறினல் ஐயக் கண்கொண்டு புருவத்தை மேலே உயர்த்துவீர்கள். அலசிப்பார்த்தால் உண்மை துலங்கும்.

மக்களுக்குச் சட்டந் தெரியாதாகையால் குற்றஞ் சாட்டப்படுபவர் தமதுபக்க வழக்கை நீதிபதி முன்னர் எடுத்துரைப்பதற்கு சட்டவறிஞர் ஒருவரின் துணையை நாட வேண்டியுள்ளது.

சட்டவறிஞரின் தேவையைப் பெறுவதென்பது எல்லோர்க்கும் இயலக்கூடிய வொன்றன்று. தரம்வாய்ந்த சட்டவறிஞர் ஒருவரை ஏற்படுத்த வேண்டுமாயின் ஆயிரக் கணக்காகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. பணம் படைத்தோர் அவ்வாறு செய்யமுடிகின்றது. ஏழையரால் அது முடிவதில்லை. எனவே பணக்காரன் வழக்கை வெல்கிறுன், ஏழை தோற்கிறுன். உண்மை, ஏழை பக்கத்திருந்த போதுங்கூட, வல்லமைவாய்ந்த வழக்கறிஞனெருவனை ஏற்படுத்த முடியாமையால் ஏழை வழக்கிழந்து வாழ்விழந்தழுகிறுன். இந்த நிலையில் சட்டத்தின்முன் நாம் எல்லோரும் சமம் என்று கூறுவதில் அர்த்தம் உண்டா? இதற்குப் பெயர் நீதியா? உண்மையைப் பார்க்கப்போனுல் சட்டத்திஞட்சியின்கீழ் நல்லோர் நலியவும், அல்லோர் வாழவும் காண்கின்றேம். இதுதானு சட்டம்? சமுதாயத்திற்காகச் சட்டம் என்கிருர்களே! இதுதானு அது?

சட்டத்திஞட்சிதான் (Rule of law) மேலானது என்கிருர்கள். ஆனுல் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள் மூலம் நடைமுறையிலுள்ள சட்டங்களை நிறுத்திவைக்கும் அதிகாரம் மகாதேசாதிபதிக்கு உண்டு. தனி மனிதர் ஒருவர்க்கு (அவர் யாரேயாயினுமாகுக) நாட்டுமக்களனைவரதும் உரிமையை, விடுபாட்டை, சுதந்திரத்தைப் பறிக்கும் ஆற்றல் உண்டென்றுல், தனி மனித சுதந்திரம் என்பது வெறும் செப்படி வித்தைதானு?

குடிமகன் ஒருவன் செய்யும் செயல் குற்றமா அல்லவா என்பதை நிர்ணயிப்பதற்கென்று தளைப்படாத நீதிமன்றங்கள் இருப்பதாகப் பெருமையடித்துக் கொள்கிறேம். ஆனுல் பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் மகாதேசாதிபதிக்குரிய தத்துவங்கள் என்ன என்பதைச் சமுதாயத்து மக்கள் அறிவார்களா? எப்படி அறிய முடியும்? சட்டந்தான் அவர்களுக்கு விளங்காத ஆங்கிலத்தில் இருக்கிறதே!

குறித்த சில செயல்கள் அல்லது நடத்தைகள் குற்றங்கள் எனப் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழாக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் கூறுகின்றன. இவ்வாறு இவ்வொழுங்கு விதிகள் கூறும் குற்றங்களை விசாரிக்கும் தத்துவம் சாதாரண நீதிமன்றங்களுக்குக் கிடையாது. இவற்றை விசாரித்து விளங்குவதற்கான நீதிமன்றங்களை நிறுவும் அதிகாரம் மகாதேசாதிபதி ஒருவருக்கே உண்டு. சுதந்திரமான நீதிமன்றங்களால் விளங்கப்படவேண்டிய வழக்குகள் இப்படித் தனியொருவரின் விருப்பப்படி நியமிக்கப்படும் நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவது நியாயமா? இப்படியான நீதிமன்றத்தால் விளங்கப்பட்டு மறியலிடப்படும் ஆளை மீட்பதற்கு ஆட்கொணர் எழுத்தாணையின் (Writ of Habeas Corpus) துணையையும் நாடமுடியாது. ஏனெனில் சாதாரண நீதிமன்றத்திற்கு அதன் சரிபிழை கேட்கும் நியாயாதிக்கம் கிடையாது.

குடிவரவுச் சட்டத்தின்கீழ் பாதுகாப்பு அமைச்சருக்கிருக்கும் தத்துவம் பயங்கரமானது: தடுப்புக் கட்டளை மூலம் எவரையும் தடுத்து மறித்து வைக்கும் தத்துவம் பாதுகாப்பமைச்சருக்குண்டு. யோபு நாடார் வழக்காளியாகவும் கிரே என்பார் எதிரியாகவுமிருந்த வழக்கில் (Jobu Nadar Vs Gray) நீதியரசர் ரி. எஸ். பெர்ணண்டோ அவர்கள், பாதுகாப்பமைச்சரின் அச் செயலைப் பிரச்சினைக்கெடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக் கில்லையென்னும் கருத்தை வெளியிட்டார். இப்படியிருக்கிறது தனி மனித சுதந்திரத்தின் தலைவிதி!

வாழ்வுக்கு வழிவகுத்து அதற்கு இலக்கணமும் கூறிய வள்ளுவர் "நோய்நாடி, நோய்முதல்நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்றார். இதுவரை நோய் இன்னது என்பதைக் கூறி அந் நோய்க்கான காரணத்தையும் உட்கிடையாகக் காட்டினோம். இவ்வளவில் வள்ளுவரின் சொல்லுரையைக் கடைப்பிடித்தோம் என்பதில் மகிழ்ச்சிதான். ஆனால் அவர் தமது குறளிற் கடைசியிற் கூறியதும் முதன்மையானதுமான "அது தணிக்கும் வாய்" எது என்பதைக் கண்டாற்றான், காணமுயன்றாற்றான் பயனுண்டு.

"தணிக்கும் வாயை" கண்டறிய முனையும்போது "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்ற குறள்தான் திரும்பவும் எச்சரிக்கின்றது. எனவே அங்கிங்கெனாதபடி ஒரு மறுமொழியை மட்டும் கூறியமைவேன். முழுக்க முழுக்கச் சட்டத்தால் உலகத்தை ஆண்டுவிடலாமென்றோ அமைதியை நிலைநாட்டி அறத்தை வளர்த்து விடலாமென்றோ நினைப்பது அறிவுடைமையாகாது. மக்களின் உள்ளம் பண்படவேண்டும். ஆளுவோரின் உள்ளம் பக்குவம் அடையவேண்டும். இதற்கான கல்விதான் இப்போது வேண்டும். இந்தக் கல்வி இல்லாத வரை சட்டங்கள் பெருகுமே தவிர, குற்றங்கள் கூடுமேயொழிய, சிறைக்கூடங்கள் மல்குமேயொழிய, அமைதியோ அன்போ வளராது.

## மணியும் ஓசையும்

நேயர்கள் கேட்கும் நியாயமான கேள்விகளுக்கு இப் பகுதியில் பதில் அளிக்கப்படும். 10 சத இந்திய தபால் அட்டையில் கேள்விகளை எழுதிக் கீழேயுள்ள முகவரிக்கு அனுப்புக:-

**கா. தமிழ்த்தம்பி**
விஜயா பிரேம் ஒர்க்ஸ், பெரிய கடை வீதி - பழனி,
மதுரை மாவட்டம், இந்தியா.

# இதயக் கோயிலும் இறைவழிபாடும்

— இ. என். ராசா —

"'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்'' என்றூர் அப்பர் சுவாமிகள். கோயில் இல்லா ஊர் கானல் பரந்த சுடுகாட்டை ஒக்கும். அதுபோல் நம் இதயத்தையும் கோயிலாக அமைத்து மணம் கமழும் பூஞ்சோலையாக மாற்றத் தவறினுல் அதுவும் சுடுகாட்டுக்கே சமானமாகும். கோயிலைப் பூசகர் எவ்வளவு சுத்தமாகவும் பக்தி மயமாகவும் வைத்திருக்கின்றூரோ, அப்படி நம் இதயக் கோயிலும் சுத்தமாகவும் பத்தி மயமாகவும் இருப்பதற்கு நாம் முயலாவிடில் தோன்றிற் புகழோடு தோன்றுத மனிதர்களாகவே மடிவோம்.

உள்ளக் கோயிலைச் சுத்தமாக வைப்பதற்கு வழி உண்மை, வாய்மை, மெய்மை இம்மூன்றையும் கைக்கொள்வதுதான். உள்ளம் உண்மையை எண்ணவும் வாய் அதை வெளியே சொல்லவும் உடம்பு அதைச் செயலாக்கவும் துணிந்தால் உள்ளக் கோயில் தூய்மை பெறும். கஷ்டமாகத் தோன்றினுலும் செயலுக்கு வந்தபின் எளிதாக முடியும்.

பெருங் கருங்கல்லைப் பார்த்துவிட்டுப் பயந்தால் கலைச் சிற்பங்களை உருவாக்க முடியுமா?

தேவையற்றுக் கிடக்கும் மண்ணையும் இரும்பையும் எடுத்து அடித்து வெட்டி உருக்கி தேவைக்குரிய — மதிப்பு வாய்ந்த பொருட்களாக மாற்றுகிறூர்களே. இந்தச் சின்னஞ் சிறு கூட்டினுள் அடைபட்டுக் கிடக்கும் நம் இருதயத்தை மாற்றி நல் வழிக்குக் கொண்டு வர நாம் ஏன் முயலக்கூடாது?

நம்மைத் தீய வழிக்கு இழுத்துச் செல்வது ஆசையும் ஆணவமுந்தான்.

ஆணவம் கொண்டவன் ஆராய்ந்துணராது ஆத்திரத்தில் ஒரு காரியத்தைச் செய்துவிட்டு பின்னுற் கவலைப் படுகின்றூன்; கண்ணீர் விடுகின்றூன். ஆணவம் குறைந்

தவன் கருமம் எண்ணித் துணிந்து செயலாற்றிப் பின் எண்ணுவதென்பதை இழுக்காகக் கொள்கிறுன்.

ஒரு காட்டுப் பகுதியில் வேலை செய்துகொண்டிருந்த ஒருவன் வேலையை முடித்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்படுகிறுன். வாகன வசதி இல்லாத தனி வழி அது. கடைகளையும் வாகனங்களையும் காண்பதற்கு ஐந்து மைல் களைக் கடக்கவேண்டும். அவனே களைப்படைந்த நிலையில் ஐந்து மைல்களையும் தாண்டிக் கடைத் தெருவை அடை கிறுன். கையில் இருந்த காசு ஐம்பது சதம். கடையில் அதைக் கொடுத்து எதையோ சாப்பிட்டுவிட்டு வீட்டை அடைகின்றுன்.

ஒரு நாள் தான் வேலை பார்த்த முதலாளியிடம் ''ஐயா! நான் தொழிலுக்குச் சென்று திரும்பும்போது ஒரு கடையிற் சாப்பிட்டேன். ஆகா எவ்வளவு இனிமை! ஐம்பது சதந்தான் கொடுத்தேன். அவர்கள் கொடுத்த சாப்பாடு ஐம்பதாயிரம் பெறும். மீண்டும் மூன்று மைல் களையும் நடந்தே வந்துவிட்டேன்'' என்றுன்.

செல்வந்தரான முதலாளிக்கு மனதிற்குள் பெரிய ஆசை. அங்கே தானும் போய்ச் சாப்பிட்டு வரத் தீர் மானித்துத் தன் சொந்தக் காரில் அவன் குறிப்பிட்ட கடைக்குப் போனுர். சாப்பிட ஏதாவது கொண்டுவாருங் கள் என்று உட்கார்ந்தார். அப்பமும் தேநீர்க் கோப் பையும் மேசைக்கு வந்தன. ஏற்கனவே சாப்பிட்டுவிட்டுப் போயிருந்த அவருக்குச் சாப்பிட மனம் இல்லை. ஒரு அப் பத்தையும் கொஞ்சம் தேநீரையும் குடித்தார். அவர் சொன்னதுபோல் மேலதிகமான ருசி எதுவுமில்லை. அவ ருக்குக் கோபம் எழுந்தது. கடைக்கார முதலாளியைக் கூப்பிட்டார். விஷயத்தைச் சொன்னுர். கடைக்காரர் சிந்தித்தார். ''உங்கள் ஊர் அப்பமும் தேநீரும் இப்படித் தான் இருக்கும்; வித்தியாசம் இல்லை; ஆனுல் உங்கள் இருவரிலுந்தான் வேறுபாடு. அவனே பசிக்களையோடு பசி யைத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சாப்பிட் டான். நீங்களோ வீண் ஆடம்பரத்திற்காகவும் பொழுது போகவில்லையே என்பதற்காகவும் அவன் சொன்னதற்காக

வும் வந்து சாப்பிட்டீர்கள். அவனுக்குப் பன்மடங்கு இனித்தது. உங்களுக்கு ருசிக்கவில்லை'' என்றார்.

இதயத்தைச் சுத்தமாக்காமல் - இறைவனிடம் அன்புப் பசியில்லாமல் நாம் பல இடங்கள் ஓடி அலைந்து ஆலயங்களைத் தொழுதாலும் நன்மை பயக்காது. எனவே வீண் ஆடம்பரத்திற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் இறைவனைத் தேடி அலையாது இருந்த இடத்திலேயே இறைவனைக் காண்பதற்கு நாம் இதயக் கோயிலைச் சுத்தமாக்க முயல்வோமாக!

★

## புத்தகங்கள்

1. ஒரு நல்ல புத்தகமானது உண்ணும் வேளையிலுங்கூட உனது இடது கையில் வைத்தவண்ணம் உன்னைப் படிக்கத் தூண்டும்.
— ஜான்சன்

2. உலகில் சாகா வரம்பெற்ற பொருட்கள் புத்தகங்களே.
— சோயத்தே

3. நூல்கள் இல்லாத ஒரு வீடு யன்னல்கள் இல்லாத அறைக்கு ஒப்பாகும். — மேன்

4. காலமென்ற மாபெருங் கடல் நடுவே அமைக்கப்பெற்ற கலங்கரை விளக்குகளே புத்தகங்கள். — விப்ளின்

5. ஒரு நல்ல புத்தகத்தைப் போல சிறந்த நண்பனும் உறவினனும் இப் பூவுலகிலேயே எனக்கில்லை. — கவி டியூப்பர்

6. நான் என்னளவில் சிந்தனையற்றவனாயிருந்தாலும் ஒரு புத்தகம் எனக்குச் சிந்தனையூட்டத் தவறுவதில்லை.
— சார்ல்ஸ் லாம்ப்

# நாடகம்

ஏ. ரி. பொன்னுத்துரை, பீ. ஏ.

[சுப்பிரமணியம் சென்றதும், அவரது மகள் கையில் வீணையை எடுத்து விருந்தையின் அருகேயுள்ள பக்கத்து அறையிலிருந்து வாசிக்கிருள். மகேசன் மெல்ல மெல்ல வந்து விருந்தையில் உள்ள கதிரையில் இருந்து வீணையை இரசிக்கிருன். வீணுகானம் நிற்கிறது.]

**மகே:** அபாரம்! அற்புதம்!! ஆகா!!!

**லீலா:** [எழுந்தபடி] என்ன கேலி செய்கிறீர்களா?

**மகே:** இல்லை லீலா; மலரினும் மிருதுவான உனது விரல்களால் வீணையின் நரம்புகளை மீட்டு இன்னிசை எழுப்பும் அபூர்வ சக்தியை யார் தான் வாய்விட்டுக் கூறபாட்டார்! அது வும் உன்னையே......... சதா.........

**லீலா:** உம்......... தொடங்கிவிட்டீர்கள்......

**மகே:** லீலா! எத்தனை ஆண்டுகளாய் இந்த வீணை வாசிக்கும் கலையைப் பயின்ருய்?

**லீலா:** நான் கற்றது நாலு ஆண்டுகள்தான்! எத்தனை ஆண்டுகளும் கற்கலாம். பன்னிரண்டு ஆண்டுகளாகக் கற்ற விற்பன்னர்களும் இருக்கிருர்கள். நான் கற்றது சிறிதுதான். ஆனல் நடனத்தைப் பொறுத்தமட்டில் ஏழு ஆண்டுகள் பயிற்சிபெற்றேன்.

**மகே:** ஆமாம். அந்தத் துறையில் நல்ல பயிற்சியும் உடையவள் என்பதை சென்ற வாரம் நடந்த கலைவிழாவில் நீ ஆடிய நர்த்தனமே காட்டிவிட்டது.

**லீலா:** அவ்வளவு பிரமாதமா என் நடனம்?

**மகே:** ஆமாம். மாம்பழத்து மேனியுடன் மதியுறிஞ்சும் முகத்துடன் மலர்க் கூந்தல் ஆட, இதழ்களில் புன்முறுவல் தவழ, கலீர் கலீர் என சதங்கை ஒலி கொஞ்ச அபிநயத்தின்

விந்தை எல்லாவற்றையுங்காட்டி ஆடினுய். வைத்த கண் வாங்காமற் பார்த்து இரசித்தேன். அதுவும் 'ஓடி விளையாடு பாப்பா' என்ற பாட்டுக்கு பிடித்த அபிநயம்.........

**லீலா :** அவ்வளவு தூரம் லயித்து விட்டீர்களா?

**மகே :** நான் மட்டுமென்ன! அந்தத் திறந்தவெளியரங்கின் முன்னே அமர்ந்திருந்த அத்தனை இரசிகர்களும் மெய்ம்மறந்து சொக்கிவிட்டார்கள். வானகத்து வெண்ணிலவு வையகத்துப் பெண்ணுருவாய் வந்ததுவோ என்று பிரமித்துவிட்டார்கள்.

**லீலா :** புகழ்ச்சிக்கும் ஓர் எல்லை இருக்கவேண்டும்.

**மகே :** இல்லை. அன்று நீ அந்த அரங்கில் மட்டும் ஆடவில்லை. அனைவரின் உள்ள அரங்கிலும் ஆடினுய் என்றுதான் கூறவேண்டும்.

**லீலா :** உங்கள் உள்ள அரங்கில் ஒருவேளை ஆடியிருக்கக் கூடும். அதற்காக எல்லோரது உள்ள அரங்கிலும் ஆடினேன் என்கிறீர்களே. அதை நான் விரும்புபவளும் அல்லவே. அதிருக்க நீங்கள் ஒருபெரும் இரகசியத்தை எனக்கு மறைத்து விட்டீர்கள்.

**மகே :** அப்படி நான் ஒருபோதும் செய்யமாட்டேன்.

**லீலா :** இல்லை. எனக்கு மறைக்க எத்தனித்த விஷயத்தை நான் எப்படியோ அந்த பொருட்காட்சிகள் சித்திரக் காட்சிகள் வைக்கப்பட்ட அறையிற் கண்டு பிடித்துவிட்டேன். என் பெயரிற் பல அழகிய சித்திரங்களைக் கண்டேன். அவற்றை நீங்கள்தானே தீட்டியிருந்தீர்கள்.

**மகே :** ஆமாம். எப்படியிருந்தன என் சித்திரங்கள்.

**லீலா :** உங்கள் சித்திரங்களை மணிக்கணக்கிற் பார்த்து மகிழ்ந்தேன். பொறி ஐந்தும் வெறி கொள்ள வந்தவன், பைங்கொடியின் கைதொட்டு இவ்வுலகத்தையே மறந்து நிற்கும் காட்சி என் மனதைப் பெரிதும் ஈர்த்துவிட்டது.

**மகே :** எப்படியோ எனது உள்ளத்து உணர்வுகளை எல்லாம் அந்தச் சித்திரத்தில்தானே முழுக்க முழுக்கக் கொட்டியுள்ளேன்.

**லீலா :** வாழ்க காதல் வாழ்க ஊடல் என்ற அடிக் குறிப்புடன் ஒரு அழகான படம் வரைந் திருந்தீர்களே. அதை எப்படித்தான் வரைந்தீர்கள் என்றுதான் வியந்தேன்.

**மகே :** காதலர்களுள் அடிக்கடி நேரும் சின்னஞ் சிறு சண்டைகளும் சில காச்சல்களுந்தான் அவர்கள் காதலுக்கு வேகமளிக்கின்றன. அவர்கள் வாழ்க்கையை மணம் கமழச் செய்கின்றன. புது மோகமும் ஆர்வமும் கொள்ளச் செய்கின்றன என்பதை நன்கு உள்ளத்திற் பதித்த நான் அந்த எண் ணத்தை அப்படியே சித்திரத்திற் காட்டி விட்டேன்.

**லீலா :** அந்தச் சித்திரத்திலுள்ள காதலர் இரு வரும் வெவ்வேறு பக்கம் முகங்களைத் திருப் பிக் கொண்டிருப்பதும் கையில் இருவரும் ஒரே மாதிரியான புல்லை வைத்திருப்பதும் அச்சித்திரத்தை இன்னும் சுவாரஸ்யப் படுத்துகிறது.

**மகே :** லீலா! [சிரித்தபடி] அந்தக் காதலர்களுக்குள் எந்த விஷயம் பற்றி மனஸ்தாபம் என்று மட்டும் கேட்டுவிடாதே. காதலர்களுக்கு நூறு விஷயம் இருக்கும். அதில் எல்லாம் மற்றவர்கள் தலையிடலாமா?

**லீலா** : இதுவரை; ஏதோ ஒரு சாதாரண சித்திரக் காரரென்றே நினைத்தேன். ஆனால் இப்போ தல்லவா புரிகிறது. அகம் சம்பந்தமான பல விஷயங்களை யெல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டு அந்த உணர்வுகளையெல் லாம் சித்திரமாகத் தீட்டுகிறீர்கள் என்று... [உற்றுப்பார்த்துவிட்டு] ஏன் உங்கள் முகம் மாறு பட்டுவிட்டது?

**மகே** : பலதடவை நாம் சந்திக்கிறோம். இன்ப மாகப் பேசுகிறோம். ஆனந்தம் கொள்கி றோம். ஆனால்...

**லீலா** : என்ன ஆனால்?

**மகே** : எனது ஆவல் நிறைவேறுமோ? இந்த இன் பம் நிலையானதுதானோ? என்றுதான்...

**லீலா** : ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்.

**மகே** : இல்லை. எனது அந்தஸ்து உனது நிலையுடன் ஒப்பிடும்பொழுது சற்றுக் குறைவுதானே. உனது தந்தைக்கு இந்தக் கிராமத்திலே ஒரு தனிச் செல்வாக்கு. சிங்கப்பூரில் அவர் ஈட்டிய பணம் அவரது குலப் பெருமை யுடன் அவரை மிக உயர்ந்த நிலையில் வைத்துவிட்டது. அவரது ஏக புத்திரியாக இருக்கும் உன்னை... என் போன்ற சாதா ரண சித்திரக்காரனுக்குக் கையளிக்க விரும்புவாரா?

**லீலா** : உங்களை நீங்கள் தாழ்வாக நினைக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில், கலைக் கண்கொண்டு பார்க்கும்போது நீங்கள் பூஜிக்க வேண்டிய ஒருவராகவே தென்படு கிறீர்கள். சங்கீதம் நர்த்தனம் போன்ற துறையில் ஈடுபாடுடைய நான் சித்திரக் கலையின் சிகரத்தை எட்டிப்பிடித்துவிட்ட உங்கள் போன்ற உத்தம பண்பாளனை அடைவது பாக்கியமல்லவா?

**மகே :** நீ பூஜிக்கலாம். புனிதன் அது இது என்று என்னை வானளாவப் புகழலாம். ஆனால் உன் தந்தை உயர்ந்த பதவியில் இருக்கும் உத்தியோகஸ்தரை ஆயிரம் ஆயிரமாக உழைக்கத்தக்க சக்தி வாய்ந்த வர்களை விரும்பலாம் அல்லவா?

**லீலா :** அவர் எப்படிப்பட்டவராய் இருந்தாலும் நியாயத்திற்குக் கட்டுப்படும் இயல்பினர்.

**மகே :** அவர் வற்புறுத்தி உன்னைக் கட்டிக்கொடுக்க விரும்பினால்......

**லீலா :** அவரிடம் அடம்பிடிக்கும் குணம் கிடை யாது, என்று கூறிய பின்னரும் இப்படிப் பேசுகிறீர்களே.

**மகே :** எனது கள்ளங்கபடமறியாத நெஞ்சு இப் படியெல்லாம் பேசவைக்கிறது.

**லீலா :** நீங்கள் எதற்குஞ் சிந்திக்க வேண்டாம். எத்தகைய சூழ்நிலை ஏற்பட்டாலும் சிக்கல் கள் வழிமறித்தாலும் உங்களைக் கரம் பற் றும் விஷயத்தில் நான் சிறிதும் அசைய மாட்டேன். உறுதியாக ஒரே மனதுடன் நிற்பேன். தந்தையை எதிர்க்கவேண்டிய நிலை ஏற்படினும் அவருக்கு எனது நியாயங் களை எடுத்துக் கூறுவேன். இதுவரை நான் எதை எதை விரும்பிக் கேட்டேனோ, அதை எல்லாம் காலம் தாழ்த்தாது தந்தவர் அவர். எனது வேண்டுகோளை அவர் எதிர்க் கவே மாட்டார். எமது எண்ணம் கட் டாயம் நிறைவேறும். உள்ளத்து உறுதியும் ஆழ்ந்த அன்பும் என்றுமே தோல்வி கண் டது கிடையா. அனாவசிய சிந்தனைகளை விடுத்துக் குதூகலமாக இருங்கள்.

**மகே :** லீலா உனது வார்த்தைகள் எனக்கு ஒருவித

தெண்பு உணர்வை ஊட்டுகிறது. வையகமே திரண்டாலும் இந்த வானமே இடிந்து வீழ்ந்தாலும் எமது அன்பை அழித்துவிட முடியாது, என்ற ஒரு குரல் என் இதயத்தில் ஒலிக்கத்தொடங்கியது. உனது அப்பா வெளியே செல்வதைக் கண்டேன். சந்தர்ப்பம் சாதகமாயிருந்ததால் உன்னுடன் கதைக்கலாம் என்று வந்தேன். அவர் திரும்புவதற்கு முன் செல்வதுதான் தக்கது. நான் வருகிறேன். என்றாலும் எனது மனதில்உனது நிழலாட்டம் தான்.

[மகேசன் செல்கிறான். லீலா அவனையே பார்த்தவண்ணம் நிற்கிறாள்.]

— தொடரும்

★★

உலகத்தின் இரகசியங்களை மூடிவைத்திருக்கும் கதவுகளைத் திறக்கக்கூடிய சக்தியைப் பெற்றால் உலகம் அதன் இரகசியங்களை நமக்களிக்கத் தயாராக இருக்கின்றது. அக் கதவுகளைத் திறக்கக்கூடிய வலிமையை நாம் பெறவேண்டும். இவ் வலிமையை நமக்களிக்கக் கூடியது மனஒருமை ஒன்றுதான். — சுவாமி விவேகானந்தர்


## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

## பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு. பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவி ரோடு, பம்பாய்-17.




## மதுவின் தீமை

க. ஆனந்தநாதன், மத்திய மகா வித்தியாலயம், வயாவிளான்.

1. உடம்பை உருக்கி வாட்டுமுள்ள
ஊனில் வெறுப்பை ஊட்டும்
கண்ணை மங்கச்செய்யும் பின்னர்
கலங்கி நிற்கச் செய்யும்

2. அண்டை வீட்டுப் பேர்களோடு
சண்டை செய்யச் சொல்லும்
மண்டை பிய்ந்து மானம்விற்று
தண்டம் கட்டச் செய்யும்

3. தெருவில் போகும் பெண்களோடு
சேஷ்டை பண்ண வைக்கும்
கோடுசென்று கூண்டில் நின்று
கேலி பண்ண வைக்கும்

4. சித்தம்மங்கிப் பித்தம் ஏறி
புத்தி மாறி நிற்பான்
கத்திக்குத்துச் சூடு என்று
செத்துக் கிடப்பர் முடிவில்

5. கெட்ட இந்தப் பேர்களோடு
எட்ட நிற்க வேண்டும்
துட்டம்நீக்கி மாசு போக்கி
தூய்மை கொள்ளல் நன்று.

# உன்புகழ் பல்கிப் பெருகுமடி.

இ. இராசரத்தினம்

அன்பு முக வடிவால் — நீயென்னை
ஆட்டிப் படைக் கின்றாய் — அங்கே
துன்ப இளை யோடின் — என்னுள்ளம்
துடித்து மறுகு மடி.

சிரித்து வரவேற் பாய் — உன்னன்புச்
சிறைக்குள் தள்ளி டுவாய் — நேரம்
தரித்து வந் திடிலோ — உன்மனம்
தவித்து உருகு மடி.

பட்டுப் போல் மேனியடி — உன்னுள்ளம்
பால் போலும் வெள்ளையடி — அழகுச்
சிட்டுக் குருவி யடி — நீயெந்தன்
சிங்காரக் கோயி லடி.

வெள்ளை மலர் வடிவம் — உந்தனுடல்
வெற்றிலைக் கொடி யாட்டம் — உந்தன்
கிள்ளைக் குர லாலே — நீயென்னைக்
கிறுங்க வைத் திடுவாய்.

மழலை மொழி யாலே — நீயென்னை
மாமா வென அழைப்பாய் — அங்கே
குழலி னிசை கேட்கும் — என்னுள்ளம்
குதித்து மகிழு மடி.

அன்புக் கரத் தாலே — எனக்கு
ஆணைக ளிட் டிடினும் — அவற்றை
இன்ப முகத் துடனே — நானென்றும்
ஏற்று நடந் திடுவேன்.

விரிந்த மலர் போலும் — உன்முகம்
விலையில் பொக்கிஷம் தான் — இப்
பரந்த ஞால மதில் — உன்புகழ்
பல்கிப் பெருகு மடி.




## கேர்ணல் யூரிககாரின்

— ஏ. சிவராசா, முள்ளியவளை. —

1934ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9ஆந் திகதி மொஸ்கோவுக்கு மேற்கே உள்ள ஸ்மோலென்க் பகுதியில் கூட்டுப் பண்ணை உறுப்பினர் ஒருவரது குடும்பத்திலே பிறந்தவர் யூரிககாரின் அவர்கள். 1951ஆம் ஆண்டில் தொழில் முறைப் பயிற்சிக் கல்லூரி ஒன்றிற் பயின்று விசேட சித்திகளுடன் பட்டம் பெற்ருர். பின்பு வொல்கா நதிப் பிரதேசத்திலுள்ள சிரடோவில் உள்ள கைத்தொழிற் கல்லூரியிற் கல்வி பயின்று பட்டம் பெற்ருர்.

தனது இளமையிலிருந்தே ககாரின் தான் ஒரு விமானியாக வேண்டும் எனக் கனவு கண்டார். அவருக்கு விமானத்துறையிலிருந்த உற்சாகத்தினுல் ''ராடோவ்'' விமானக் கழகத்திற் சேர்ந்தார். பின்னர் 'ஒரேன்பே ஊர்க்'கிலுள்ள இராணுவ விமானப் பள்ளியிற் பயின்ருர். 1957ஆம் ஆண்டு தொடக்கம் விமானியாக இருந்த ககாரின் யுத்தவிமானப் படையின் வடபிரிவில் கடமையாற்றினுர்.

பேராற்றலும், துணிச்சலுமுடைய போர் விமானி என்ற முறையில் ககாரின் விண்வெளி வீரர்களின் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அங்கு அவரது திறமை மிகவும் விருத்தியடைந்தது. பொதுச் சேவையில் உன்னிப்பான அக்கறையும் சுறுசுறுப்பான உழைப்பும் தளராத உறுதியும் பெருந் துணிச்சலும் பேராற்றலும் உடைய ககாரின் மிகச் சிக்கலான விண்வெளி நுணுக்கங்களை நெறிப்படுத்தவும், விமானப் பயிற்சி, பரசூட் பாய்ச்சல் ஆகியவற்றை வெற்றிகரமாக மேற் கொள்ளவும் தொடங்கினுர்.

மனிதனைத் தாங்கிப் பறந்த முதல் விண்வெளிக் கப்பலில் சோவியத் பிரசையான யூரிககாரின் 1961ஆம் ஆண்டு சித்திரை மாதம் 12ஆந் திகதி பிரயாணஞ் செய்தார். ''வொஸ்டொக்'' என்ற செய்மதியை ஓட்டிய சாரதியும் யூரிககாரினேயாவர். - இவருடைய பயணம் 108 நிமிடங்கள் விண்வெளியில் - பின்னர் பாதுகாப்பாகப் புவியை வந்தடைந்தார். இயற்கையின் சக்திகளின் மீதான மனிதனது நிகர்ப்படுத்த முடியாத வெற்றியாயும், விஞ்ஞானத்தொழில் நுட்பத்தின் மாபெரும் சாதனையாகவும் மனித சிந்தனையின் மாபெரும் வெற்றியாகவும், அது அமைந்தது.

விண்வெளிச் சாதனையை அவருக்குப் பின்னர் அவரின் அடிச்சுவட்டில் பின் தொடர்ந்தோர் மீறி விட்டனர். ஆனால், பிரபஞ்ச ரகசியங்களை ஊடுருவி விண்வெளியைப் பிளந்து பறந்த முதல் மனிதன் யூரிககாரின். அதனாற்றான் அவர் சரித்திர சங்கப் பலகையில் முதல் இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

அண்டவெளிப் பயணத்தை மனிதனால் தாங்க முடியும் என்பதை மாத்திரமல்ல அண்டவெளி யாத்திரையின் போது பூரண ஆற்றலுடன் மனிதன் செயற்பட முடியுமென்பதையும் யூரிககாரின் நிரூபித்தார். அவருடைய சாதனையைக் கௌரவிக்க சித்திரை 12ஆந் திகதியை சோவியத்யூனியன் அண்டவெளித் தினமாகப் பிரகடனம் செய்துள்ளது.

தமது முதலாவது விண்வெளிப் பயணத்தின்பின் யூரிககாரின் வானவெளிக்குப் பிரயாணஞ் செய்யவில்லை. ஆனால் ஏனைய சோவியத் அண்டவெளிப் பிரயாணிகளுக்குப் பயிற்சி கொடுப்பதில் ஈடுபட்டிருந்தார். விண்வெளிப் பிரயாணிகள் பிரிவின் பயிற்சிப் பணிகளை நடாத்தி வந்தார்.

இவர்பெற்ற பாராட்டுப் பட்டங்கள் கணக்கிலடங்கா. சிரேஷ்ட லெப்டினனாக இருந்த இவர் அதிஉன்னத கௌரவப் பரிசில்களான 'சோவியத் வீரர்' தங்கத் தாரகையையும் லெனின் விருதையும் இரம்பிளினில் பெற்றார். 'சோவியத் உழைப்புவீரர்' என்ற உயர்தர பட்டத்தையும் பெற்

ஞர். தனது விமானப் பயிற்சியை இடைவிடாது சீர்படுத்திக்கொண்டே வாழ்ந்த ககாரின் விண்வெளித் தொழில் நுட்பம்பற்றியும் ஆராய்ச்சிகளை நடத்தினர். விண்வெளி வீரர் குழுவினருக்குப் பயிற்சி கொடுப்பதிலும் தோழர்களுடன் தனது அநுபவங்களைப் பகிர்ந்துகொள்வதிலும் ககாரின் துரித பங்கு எடுத்துக்கொண்டார். இதனுற்றான் அவர் சகவிண்வெளி வீரர்களின் அன்பையும் பெருமதிப்பையும் சம்பாதித்துக் கொண்டார். இவ் வருட ஆரம்பத்தில் மாஸ்கோவிலுள்ள ''ஸூக்கோவ்ஸ்தி'' விமானத் துறைப் பொறியியல் கல்லூரியில் விசேட சித்திகளுடன் பட்டம்பெற்றுர். இவரது மனைவி வலன்டினு - ககாரின் ஒரு மருத்துவமாது. இவர்களுக்கு எலினு, கலினு என இரு பெண் குழந்தைகளுண்டு. 9-3-68இல் தனது 34ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினர்.

அண்டவெளியை மனிதகுலம் பிளந்து வெற்றிவாகை சூட வழிவகுத்த கேர்ணல் யூரிககாரின் 1968ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27ஆந் திகதி ஒரு விமானப் பயிற்சிப் பிரயாணத்தின்போது விபத்தில் சிக்கி மரணமடைந்தார். விண்வெளியிலே முதல் இடத்தைப் பிடித்துக் கொண்ட ககாரின் உலக மக்களின் மனத்திலும்கூட முதலிடத்தைப் பிடித்துக் கொண்டார்.

---

தொடர்ச்சி:-

## புத்தள மா நகரம்

மா. தெரேஸ்

விளைபொருட்கள்: நெல், குரக்கன், கடுகு, வாழை, பூசனி, மா, தோடை, மரவள்ளி, வற்றுளை, முருங்கை, கெக்கரி முதலியன.

குடிசைத் தொழில்: பட்டணத்தை அடுத்து கிடுகு பின்னல், கோழிவளர்த்தல், பீடிசுற்றல், பனைஓலைகொண்டு பெட்டி, தட்டுகள் இழைத்தல், சிறு உமல் இழைத்தல், பெரிய சீமேந்துக் கடதாசி உறைகளை வெட்டிச் சிறிய பெரிய கடதாசி உறைகள் செய்தல், ஆடு வளர்த்தல், புகையிலைச் சிப்பங்களைக் கட்டத் தென்னேலையில் பாய் இழைத்தல், பன்றி வளர்த்தல், தையல் வேலைகள் இடத்திற்கிடம் நடைபெறுகின்றன. பிரம்புக் கூடைகள் இழைத்தல், அகப்பை செய்தல், விளக்குமாறு கட்டுதல் முதலியனவும் நடைபெறுகின்றன.

மிருகங்கள்: ஆடு, மாடு, குதிரை, பன்றி, கழுதை (கற்பிட்டி யிலதிகம்) முதலியன இப் பகுதியிலுள்ள மிருகங்களாம்.

பெரிய இன விஷப் பாம்புகளும் இங்கேயுண்டு. புத்தளமிருந்து அநுராதபுரம் போகும் வழியில் பதினேழாவது கட்டையிலிருந்து சிறிது தூரத்திற்கப்பால் வில்பத்து என்ற இடத்தில் அரசினரால் வன மிருகங்கள் பரிபாலனம் பண்ணப்படுகின்றது. இங்கு மிருகங் களைச் சுடுவோர் கடுந்தண்டனை பெறுவார்கள். பிற நாட்டவர் இந்த வன பரிபாலனப் பகுதியைக் கண்டுகளிக்க வருவர்.

சனத் தொகை: புத்தள மாவட்டத்திலே 1963-ல் எடுத்த சனத் தொகைக் கணக்கின்படி 3,02,722 மக்கள் இருக்கின்றனர். சனத் தொகை கூடிய பகுதி, குறைந்த பகுதி, ஆகக் குறைந்த பகுதி என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பிரதானபாதைகளும், கடற்கரைப் பிரதேசமும், கடைவீதிகளும் நிறைந்த பகுதிகளிலே கூடிய சனத் தொகை காணப்படுகின்றது. பிரதான கற்பாதைகளை அடுத்து சுமார் இரண்டு மூன்று மைல்களுக் கப்பால் சனத் தொகை குறைந்து காணப்படுகின்றது. காட்டுப் பகுதிகளில் சனத் தொகை மிகவும் குறைவு.

ஞாயிறு தோறும் சந்தை கூடும். இறைச்சிக் கடை, மீன்கடை, மரக்கறிக்கடை, மட்பாத்திரக் கடைகளுமுண்டு. சந்தைக்கு ஒட்டுக் கச்சி, அனமடு, தம்போவ, கரத்தீவு இன்னும்பல இடங்களிலிருந்து பற்பல பொருட்கள்வந்து குவியும். வெள்ளிக்கிழமை நண்பகல் தொடக்கம் சனிக்கிழமை முழுநேரமும் கடைகள் மூடப்படும்.

சுமார் ஐந்துபத்து வருடங்களுக்கு முன்பு புத்தள மா நகரத்தை மலேரியாக் காய்ச்சல் வெகுவாகப் பாதித்து வந்தது. பின் நாளடை வில் சௌக்கியப் பகுதியினரின் விடாமுயற்சியினாலும் மக்களின் ஒத்துழைப்பினாலும் தற்போது மலேரியாக் காய்ச்சல் குறைந்து கொண்டே வருகிறது.

புத்தளத்தைப்பற்றி ஓர் பழமொழி உண்டு. ''எத்தளம் போனாலும் புத்தளம் போகாதே'' என்பது அது. ''புத்தளம் போனாலும் புத்தியாய் நட'' என்பது வேறொன்று. எக்காரணம்பற்றி இப் பழ மொழிகள் தோன்றினவோ தெரியாது. முற்காலத்தில் ஓர் அர சாங்க உத்தியோகத்தரை புத்தளத்திற்கு மாற்றினால் அங்கே செல் வதற்கு விரும்பமாட்டார். ஆனால் அங்கு சென்றபின் மனநிம்மதி அடைவாராம். நல்ல இடம்தான். தண்ணீர்க் கஷ்டம். மற்றப்படி இங்குள்ளவர்கள் நல்லவர்கள். துவேஷம் காட்டாதவர்கள். அன்பும் பண்பும் மிக்கவர்கள் என்று புகழ்வதுண்டு.

போக்குவரத்து: புத்தளமிருந்து அநுராதபுரம், குருநாகல், கொழும்பு, கரைத்தீவு, கற்பிட்டி முதலிய இடங்களுக்கு பஸ்

சேவை உண்டு. மேலும், புத்தளமிருந்து கொழும்புக்குப் புகையிரத சேவை 1965-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அட்டவில்லு சீமெந்துத் தொழிற்சாலைக்குப் போவதற்கும் புத்தளமிருந்து வேலைக்கு வேண்டிய உபகரணப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கும் புகைவண்டி உபயோகிக்கப்படுகின்றது. கொப்பரு, உப்பு, மாடுகள், என்பனவும் புகைவண்டி மூலம் கொண்டுசெல்லப் படுகின்றன.

புத்தள நகரம் ஒருவகையில் புண்ணியஞ் செய்த இடம் எனக் கருதவேண்டியுள்ளது. கதிர்காமம், முனீஸ்வரம், மடுப்பதி, தலைவில்லு, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் யாத்திரீகர்கள் பலர் புத்தள மண்ணைக் கடந்தே செல்லவேண்டும்.

புத்தளப் பட்டணத்திற்கு வடக்கெல்லையாகவுள்ள பொன்பரப்பி என்ற இடத்திற்கு அருகில் 'ஏலுவங்குளம்' என்ற ஒரு கிராமம் உண்டு. முன்பெல்லாம் தண்ணீருக்கு இப் பகுதியிற் பெரும் தட்டுப்பாடு. பின்னர் அரேபியாவிலிருந்து வந்த நிபுணர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாகத் தண்ணீர் ஊற்றுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து இராப்பகலாகத் தண்ணீர் பிரவாகித்துக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றனர். புத்தளத்திலும் குடியேற்றத் திட்டத்தின்கீழ் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் குடியேறியுள்ளனர்.

மக்கள்: இங்கு முஸ்லீம் மக்கள் தொன்று தொட்டே குடியேறியவர்கள். இவர்கள் பெரும்பாலும் பணம் படைத்தவர்கள். மிகவும் ஒற்றுமையுடையவர்கள். ஏனைய இனத்தாரையும் அன்புடன் நேசிப்பவர்கள். இங்குள்ள முஸ்லீம் மக்களின் முன்னேற்றத்திற்கு பெருஞ் செல்வந்தரும் கொடை வள்ளலுமாகிய E. S. M. முதலாளி அவர்கள் காரணமாயுள்ளனர் என்றால் மிகையாகாது.

# மாணவர் மன்றம்

**அன்புள்ள மருமக்களே!**

மாணவர் மன்றத்தில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புகிறவர்களின் பெயர்கள், முகவரிகள் இப்பகுதியில் வெளியிடப்படும். நீங்கள் சேர்வதுடன் உங்களுக்கு அறிமுகமானவர்களையும் அங்கத்தவர்களாகச் சேர்க்க. —மணிமாமா


33. செல்வி இ. நா. மங்கையர்க்கரசி
ம. மகாவித்தியாலயம், வசாவிளான்.

34. க. காளிதாசப் புலவர்
மகாவித்தியாலயம், ஏழாலை.

# பண்டார வன்னியன் நினைவு விழா

"முல்லைமணி"

31-10-68 வன்னி நாட்டின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள். வன்னி நாட்டின் கடைசிமன்னன் மாவீரன் பண்டார வன்னியனின் நினைவுச் சிலையமைந்த கற்சிலை மடு விழாக்கோலம் பூண்டது. ஈழத்துத் தமிழ் தினசரிகள் எல்லாம் சிறப்பு மலர் வெளியிட்டன. பத்தாயிரத்திற்கு அதிகமான பொது மக்களும் பாடசாலை மாணவரும் நினைவுச் சிலைக்கு மலர் அஞ்சலி செய்தனர். மாவீரன் பண்டார வன்னியனின் வீர வாள்கொடியை வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் உயர்த்தினுர். வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் ஆ. பெருமையினுர் அவர்கள் ஓவியர் இ. வரதராஜாவினுல் வரையப்பட்ட பண்டார வன்னியன் உருவப் படத்தைத் திரைநீக்கம் செய்தார்.



பண்டாரவன்னியன் கழகத் தலைவர்

165 ஆண்டுகளாக மறக்கப்பட்ட மாவீரனுக்கு பண்டார வன்னியன் கழகத்தினர் பெருவிழா எடுத்தனர். இலங்கை சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகளாகின்றன. அந்நிய எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட வீரர்கள் பலர் தேசிய வீரர்களாகக் கணிக்கப்பட்டு அவர்களுக்குப் பல ஆண்டுகளாக விழா எடுத்துவருகின்றனர். பண்டார வன்னியனும் தேசியவீரர் பட்டியலில் இடம்பெற வேண்டும்.

ஈழத்து வரலாற்று ஏடுகளில் பண்டார வன்னியனின் பெயரே கிடையாது. இவற்றைப் படிக்கும் இளம் சந்ததியினருக்குப் பண்டார வன்னியனைப் பற்றியோ வன்னி நாட்டைப்பற்றியோ அறியும் வாய்ப்பில்லை. பண்டார வன்னியனை நினைவுறுத்தும் கற்சிலைமடுவில் அமைந்த நடுகல்லைப் போலவே வன்னி நாட்டின் அடர்ந்த காடுகளில் எத்தனையோ கல்வெட்டுக்களும் அழிபாடுகளும் காணப்படுகின்றன. இவற்றை ஆராய புதைபொரு ளாராய்ச்சியாளரும் கல்வெட் டாராய்ச்சியாளரும் முன்வரவேண்டும். இதனால் வன்னி நாட்டின் வரலாறு மறக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் வருகிறது. 'ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்' என்னும் முதுமொழி நீரோடும் ஆற்றிற்கு மாத்திரமன்றி வரலாற்றிற்கும் பொருந்தும். வரலாறு வெளிப்படாத காரணத்தால் வன்னித்தாய் அழகிழந்து பொலிவிழந்து காணப்படுகின்றாள். தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு பகுதி — சிறப்புமிக்க பகுதி — மண்ணோடு மண்ணாயழிந்து போவதைக் கண்டும் நாம் வாளாவிருப்பதா? இன்னும் சில ஆண்டுகள் சென்றால் இப்பொழுது கிடைக்கக்கூடிய சான்றுகளும் அழிந்துவிடுமே! இதனைப் போற்றிப் பாதுகாப்பாரில்லையா?

மாணவர்களே! வரலாற்றை மாற்றியமைக்கும் சக்தி உங்களுக்கு உண்டு. நீங்கள் முனைந்தால் முடியாதது ஒன்றில்லை. உங்கள் பிறந்த பொன்னாட்டின் வரலாறு வெளிப்பட உங்களாலானதைச் செய்வதாக இன்றே பிரதிக்ஞை செய்யுங்கள். விரைவில் பண்டாரவன்னியனதும் வன்னி நாட்டினதும் வரலாறு ஈழத்துச் சரித்திர ஏடுகளில் இடம்பெறும்.

> "வீரஞ் செறிந்த வன்னி நாடு — இதன்
> மேன்மை உயரப் பணி செய்வோம்"

* * *

## நேயர்களுக்கு

வெற்றிமணி இதழ்பெறும் நேயர்கள் இதுவரை சந்தா அனுப்பாதிருந்தால் அனுப்பி உதவும்படி தயவாகக் கேட்கின்றேன். — ஆசிரியர்

# பிறர் நலம் பெரிது

## கமலாவும் சங்கிலியும் (37)

மு. க. சுப்பிரமணியம்

ஒரு நாள் மணி என்ற மாணவன் பகிரங்க பரீட்சை எழுதுவதற்காக வயற்பக்கமாக உள்ள வழியால் நடந்து சென்றான். பரீட்சை மண்டபத்திற்கு பரீட்சை தொடங்குமுன் செல்ல முடியுமோ என்ற ஏக்கத்தோடு வேகமாக நடந்துகொண்டிருந்தான். அப்பொழுது யாரோ தேம்பி அழுகின்ற குரல் அவன் காதுகளில் விழுந்தது. குரல் வந்த பக்கம் ஓட எண்ணினான். ஆனால் அவன் உள்ளத்தினுள் இருக்கும் கெட்ட குரல் 'பரீட்சைக்கு நேரமாகிறது; குரலைப்பற்றிக் கவனிக்காதே; உன் விஷயத்தைப் பார்' என்று கூறியது. மணி கவலைதோய்ந்த முகத்துடன் மேலே நடக்கத்தொடங்கினான்.

திரும்பவும் அவன் காதுகளில் அந்தக் குரல் பலமாகக் கேட்டது. 'மணியின் உள்ளத்திலிருக்கும் நல்ல குரல்' ஓடிப்போ - உதவிசெய் - உன் நன்மையை மாத்திரம் கருதாதே' என்று கூறியது. மணி குரல்வந்த திசையை நோக்கி ஓடினான். வயல் நடுவேயுள்ள சிறு குட்டையின் பக்கத்தே கமலா என்ற சிறுமி அழுதுகொண்டு நின்றாள். மணி சிறுமியை நோக்கி 'ஏன் அழுகின்றாய்' என்றான். கமலா ''யான் தண்ணீர் எடுக்கக் குனிந்தபோது என் சங்கிலி குட்டையில் விழுந்துவிட்டது. தேடினேன் காணவில்லை. வீட்டுக்குப்போக அடிப்பார்கள்'' எனக்கூறித் திரும்பவும் அழுதாள். மணி குட்டையில் இறங்கினான். சங்கிலியைத் தேடினான். சங்கிலி கிடைத்தது. கமலாவின் கையில் கொடுத்து பரீட்சை மண்டபத்துக்கு விரைந்தான். கமலா 'நீங்கள் செய்த உதவியை என்றும் மறவேன். எனக்காகக் கஷ்டப்பட்டு விட்டீர்கள்' என்று கூறுவது மணியின் காதில் விழுந்தது.

மணி பரீட்சை மண்டபத்தை அடைந்தபோது பரீட்சை ஆரம்பித்து அரைமணித்தியாலத்திற்கு மேலாகிவிட்டது. பரீட்சை எடுக்க அனுமதிக்க முடியாது என மேற்பார்வையாளர்கூறவே மணி வீடு திரும்பினான். தாயாரிடம் நடந்ததைக் கூறினான். ''கவலைப்படாதே மணி! அடுத்தமுறை பரீட்சை எழுதலாம். நீ உன் நலனைக் கருதியிருந்தால் அந்தச் சிறுமி சங்கிலியை இழந்திருப்பாள்'' எனத் தாய் கூறினாள்.

# அறிவுப் போட்டி இலக்கம் 5 இன்
# சரியான விடைகள்

1. அருணகிரிநாதர் 2. வித்துவான் க. வேந்தனார்
3. ஏறக்குறைய 25,000 மைல் (24,840) 4. பங்குனி 5. மாலை 4 மணி
6. மாலைக்குமாலை, கவிதைக்கன்னி, முல்லைக்காடு.
7. கலைவாணன் 8. எருதுக்கொடி

## பரிசு பெற்றோர் விபரம்

பலர் சரியான விடையனுப்பினர். சிலர் சில இடங்களை நிரப்பாது விட்டுள்ளனர். சரியான விடையனுப்பியவர்களில் அதிஷ்டச் சீட்டுமூலம் பின்வரும் ஐவர் தெரிவு செயயப்பட்டனர். ஒவ்வொருவரும் ரூபா 2/- பரிசாகப் பெறுகின்றனர்.

பரிசு பெற்ற நேயர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

1. பீ லூர்து தேவலோகநாயகி, வற்றுப்பளை, முள்ளியவளை.
2. மா குகலோஜன், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.
3. சு. பராசக்தி, படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.
4. நா. நடனசபாபதி, குமுழமுனை முள்ளியவளை.
5. ம. குகமூர்த்தி, C/o. வே. பூவிலிங்கம், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

**போட்டி இல. 6 15-12-68 இதழில் வெளியிடப்படும்.**


# வெற்றிமணி

# ✶ பொங்கல் மலர் ✶

**64 பக்கங்கள் — விலை ரூபா 1-00**

தை மாதம் வெற்றிமணி பொங்கல் மலர் சிறப்பிதழாக வெளிவரவிருக்கிறது.

பத்திரிகைக் கடதாசியின் விலையேற்றத்தால் குறிப்பிட்ட தொகையான மலரே அச்சிடப்படும். எனவே பொங்கல் மலர் தேவையானவர்கள் தயவுசெய்து தேவையான பிரதிகளுக்குரிய தொகையை அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளவும்.

சந்தாத் தொகை அனுப்பியவர்கள் மலருக்குப் பிரத்தியேகமாக 75 சதம் அனுப்பவேண்டும்.

— ஆசிரியர்

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது Q. 3.830


## QUALIFIED OPTICIANS



*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,

**COLOMBO. 11.**

*Telegrams:* **VASAOPTICO** *Telephone:* **2931**

---

கண்களுக்குத் தேவையான

சகலவிதமான கண்ணாடிகளுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

# மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,

கொழும்பு. 11.

தொலைபேசி: 2931


இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-11-68 வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.